DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 275 of 2022 |
| Deposition of witness for | : | PW10 |
| Name | : | ராகவேந்திரன் |
| Father's Name | : | ராதாகிருஷ்ணன் |
| Village | : | சின்னமணவாரணப்பள்ளி |
| Taluk | : | கிருஷ்ணகிரி |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | மார்க்கெட்டிங் |
| Age | : | 31 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 23rd day of May 2025.
எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

முதல் விசாரணை :–

நான் தற்போது பெங்களூரில் வசித்து வருகிறேன். மார்க்கெட்டிங் தொழில் செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். கடந்த 04.11.2018 ஆம் தேதி மதியம் 02.00 மணியளவில் சிக்காரி மேடு குர்குரே கம்பெனி அருகே வைத்து போலீசாரிடம் போட்டுக் கொடுத்தேன். அங்கு போலீசார் படம் வரைந்து எழுதி என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். சக்திவேல் என்பவரும் என்னுடன் சேர்ந்து கையெழுத்து செய்தார். விபத்து வழக்கு சம்பந்தமாக அந்த இடத்தில் கையெழுத்து வாங்குவதாக எங்களை விசாரிக்கும் போது சொன்னார்கள். மேற்படி பார்வை மகசர் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–

நீங்களும், இறந்து போன கணேசனும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். என்ன வண்டி மோதியதாக சொன்னார்கள் என்றால் கண்டெய்னர் லாரி. நீங்கள் சம்பவ இடத்திற்கு

போகவில்லை, சம்பவத்தை பார்க்கவில்லை அதனால்தான் உங்களுக்கு எந்த வாகனம் மோதியது என்று உங்களால் சொல்லமுடியவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் கையெழுத்து செய்த ஆவணத்தை காவல் நிலையத்தில் வைத்து தான் செய்து கொடுத்தீர்கள் தற்போது வழக்கிற்காக பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. இறந்து போனவர் உங்கள் ஊர்க்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை :–</u>

இல்லை.

ஒம் /– திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 275 of 2022 |
| Deposition of witness for | : | PW11 |
| Name | : | சக்திவேல் |
| Father's Name | : | நாராயணன் |
| Village | : | சின்னமணவாரப்பள்ளி |
| Taluk | : | கிருஷ்ணகிரி |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | இன்ஜினியர் |
| Age | : | 29 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 23rd day of May 2025.
எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :-</u>

நான் தற்போது மைசூரில் குடியிருந்து வருகிறேன். இன்ஜினியராக வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கையெழுத்தை கடந்த 04.11.2018 மதியம் 02.00 மணியளவில் சிக்காரி மேடு குர்குரே கம்பெனி அருகே வைத்து போலீசாரிடம் மேற்படி கையெழுத்து போட்டேன். போலீசார் அந்த இடத்தில் வரைபடம் வரைந்து விசாரித்து கொண்டிருந்தார்கள். அப்போது நானும், சாட்சி ராகவேந்திரனும் கையெழுத்து போட்டோம். இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

நீங்களும், இறந்து போன கணேசனும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் மேலும் உங்களுக்கு தெரிந்தவர் என்றால் ஒரே ஊர்க்காரர் அவ்வளவு தான். நீங்கள் கையெழுத்து செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று படித்துப் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. என்ன

வாகனம் மோதியது என்று தெரிந்து கொண்டீர்களா என்றால் கண்டெய்னர் லாரி. நீங்கள் தவறாக சொல்கிறீர்கள், மோதியது கண்டெய்னர் லாரி அல்ல, வேறு வாகனம் என்றால் சரியல்ல. நீங்கள் சம்பவ இடம் செல்லாததால் தான் உங்களுக்கு தெரியவில்லை, காவல் நிலையத்தில் வைத்து தான் நீங்கள் கையெழுத்து செய்து கொடுத்தீர்கள் என்றால் சரியல்ல. இறந்து போனவர் உங்கள் ஊர்க்காரர், உங்களுக்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை :–</u>

இல்லை.

ஒம் /– திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.